தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு.அ.ஜஸ்டின்,பி.எஸ்சி(விவ)

செ.மு.ஆ.எண்.அ2/3063/2019.

நாள்: 08.11.2019

| | |
|---|---|
| பொருள் | பணிக்குழு-தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - நேரடி தேர்வு மூலம் 2015–16, 2016-17, மற்றும் 2017–18 ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பி.அ.) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு இளநிலை உதவியாளர் (பி.அ.) பதவியில் பணி வரன்முறை செய்து ஆணையிடல். |
| பார்வை | 1. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அறிபி5/139388/18 நாள் 05.03.2019.<br>2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அ2/3063/19-2 நாள் 07.03.2019.<br>3. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண்.அபபி3/155922/17-1 நாள் 31.1.2018. |

ஆணை:-

பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - நேரடி தேர்வு மூலம் 2015–16, 2016–17, மற்றும் 2017-18 ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பி.அ.) ஆகத் தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு மாவட்ட ஒதுக்கீடு வழங்கி உத்தரவிடப்பட்டது.

பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இளநிலை உதவியாளர் (பி.அ) ஆகப் பணியில் சேர்ந்தவர்களுக்கு பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இளநிலை உதவியாளர் (பி.அ) ஆகப் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எ | பெயர்/TNPSC No. திரு/திருமதி | பணிபுரியும் அலுவலகம் | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள். |
|---|---|---|---|---|
| 1 | ம.அறிவானந்தம்/5 | வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர். | 11.03.2019 முப | 11.03.2019 முப |

மேற்கண்ட இளநிலை உதவியாளர் ((பி.அ) க்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34 இணைப்பு 5-ன்படி இப்பணியாளருக்குத் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்குள் பவானி சாகரில் அளிக்கப்படும் அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண் பருவம் முடித்தப் பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்து உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும் பணி வரன்முறை ஆணை 2015-16, 2016–17, மற்றும் 2017-18 – ஆம் ஆண்டு தொகுதி 4-ல் அடங்கிய நேரடி பணி நியமனங்கள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை உயர்நீதி மன்றக் கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது.

"This regularization is subject to the outcome of the W.P's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the post included in combined Civil Service Examination - Group-IV Services for the year 2015-16, 2016 – 17 and 2017 – 18 recruitment."

ஒம்/-அ.ஜஸ்டின்,
வேளாண்மை இணை இயக்குநர்
தஞ்சாவூர்.

பெறுநர்:
திரு.ம.அறிவானந்தம்,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.
நகல்-வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
(அபபி3 பிரிவு)
நகல்-பணிப்பதிவேடு/இருப்புக்கோப்பு.

//ஆணைப்படி//

9/11/19
கண்காணிப்பாளர்

எம்.தே.

9/11/19